பக்கங்கள் ~ 6 விலை: ~5/-

# ஐக்கியதீபம்

திங்கள் AIKIYATHEEPAM இதழ்

JAFFNA DISTRICT CO-OP. COUNCIL — யாழ் மாவட்டக் கூட்டுறவுச் சபை

தீபம் ~ 53 ஏப்பிரல் ~ மே, 2003 ஒலி ~ 68

கணனி வடிவமைப்பில்
புது பொலிவுடன் வெளிவரும்
'ஐக்கியதீபம்'
இதழ் பல்லாண்டுகாலம்
நீடித்து வெளிவர
வாழ்த்தும்
ஊர்காவற்றுறை பல நோக்குக்
கூட்டுறவுச் சங்கம்.
ஊர்காவற்றுறை

## அர்ப்பணிப்புக்களால் கட்டியெழுப்பப்பட்ட

# கூட்டுறவு நிறுவனங்களில் அரசியல் தலையீடும் ஊழல்களும் களையப்பட வேண்டும்!

## கூட்டுறவு அபி.ஆணையாளர் இளங்கோவன் வேண்டுகோள்!

**வடபகுதியில் -குறிப்பாக யாழ். மாவட்டத்தில அர்ப்பணிப்பு சிந்தனையுள்ள கூட்டுறவாளர்களினால் நல்ல நிலையில் கட்டி எடுப்பப்பட்ட கூட்டுறவு இயக்கத்தில் அரசியல் தலையீடுகளும,உழல்களும் மலிந்து காணப்படுவதால் இன்று அவ்வியக்கம் மிக்வும் நலிவுற்ற நிலையில் காணப்படுவதாக வடக்கு கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திரு.இ.இளங்கோவன் கவலை தெரிவித்துள்ளார்.**

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் யாழ்.கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு.செ.கனகசபாபதி தலைமையில் நடைபெற்ற மா்நாடு ஒன்றில் வடக்கு - கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திரு.இ.இளங்கோவன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

யாழ். மாவட்டத்தில் யூ.என்.டீ.பி நிறுவனத்தின் கூட்டுறவு நிறுவனங்கள் மூலமான செயற்பாடுகளின் வெற்றி குறித்த ஆய்வுகள் இம்மாநாட்டில் மேற் கொள்ளப்பட்டது.

இம்மாநாட்டில் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திரு.இ.இளங்கோவன் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது,

யுத்த காலத்தில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் யுத்த அனர்த்தங்களினால் பாதிப்புற்ற மக்களுக்கு ஆற்றிய அளப்பரிய சேவையை எவராலும மறக்க முடியாது. கூட்டுறவு நிறுவனங்களினால் தயாரிக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் யாவும் மக்கள் மயப்படுத்தப்பட்டு அவர்களை இலகுவில் சென்றடையக் கூடியதாகவும் அவர்களது தேவையைப் பூர்த்தி செய்யக் கூடிய

(6ம் பக்கம் பார்க்க...)



யாழ். வீரசிங்கம மண்டபத்தில் நடைபெற்ற வடகிழக்கு மாகாண மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்களும், யு.என்.டி.பி அதிகாரிகளும் கலந்து கொண்ட கலந்துரையாடலில வடகிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திரு.இ.இளங்கோவன் உரையாற்றுகிறார்.

# யுத்த அனர்த்தங்களினால் யாழ்.மாவட்ட கூட்டுறவு சங்கங்களுக்கு 15 கோடி இழப்பு

## நட்ட ஈடு வழங்குமாறு பிரதமரிடம் கோரிக்கை

யாழ்.குடாநாட்டில் கடந்த காலங்களில் இடம்பெற்ற யுத்த அனர்த்தங்களினால், யாழ் மாவட்டத்தில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு சுமார் 15கோடி ரூபா வரை இழப்பு ஏற்பட்டுள்ளது. இவ் இழப்பீடுகளை சம்பந்தப்பட்ட சங்கங்களுக்கு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

யாழ் மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசம் இலங்கைப் பிரதமர் ரணில்விக்கிரம சிங்காவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இக் கோிரிக்கை அடங்கிய மகஜர் ஒன்றில் பிரதமருக்கு முகவரி இட்டு அவரது செயலாளர் பிரட்மன் வீரக்கோனிடம் யாழ். செயலகத்தில் வைத்து சமாசத்

(6ம் பக்கம் பார்க்க...)

## யு.என்.டி.பி நிறுவனம்

# 17 பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்களுக்கு 1 கோடியே 50லட்சம் ரூபா நிதியுதவி

யாழ். மாவட்டத்திலுள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களையும் அதன் அங்கத்தவர்களையும் அபிவிருத்தி அடையச் செய்யும் முகமாக யு.என்.டி.பி நிறுவனம் முதற்கட்டமாக யாழ். மாவட்டத்திலுள்ள 17 பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 1கோடியே 57லட்சம் ரூபாவினை வழங்கியுள்ளது.

யு.என்.டி.பி நிறுவனத்தினால் வழங்கப்பட்ட இப்பணத்தை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுடையே அங்கத்தவர்களுக்கு விவசாயம், கால்நடைவளர்ப்பு, கடற்றொழில், சிறுகைத்தொழில், சேவைகள் போன்றவற்றிற்கு 50ஆயிரம் ரூபாவிற்கு உட்பட்ட தொகையை கடனாக வழங்கியுள்ளது. இக்கடன் பணத்தை பெறும் அங்கத்தவர்கள் தவணை அடிப்படையில் குறிப்பிட்ட வீதத்துடன் கட்டி முடிக்கப்பட வேண்டும்.

(6ம் பக்கம் பார்க்க...)

## கட்டைவேலி – நெல்லியடி ப.நோ.கூ. சங்கத்தில்

# இரண்டாவது உலக இந்துமாநாடு

மேற்படி நிகழ்வு 10.05.2003 சனிக்கிழமை பி.ப 3மணிக்கு நெல்லியடி முருகன் ஆலய திருமண மண்டபத்தில் சங்கத்தின் தலைவர் திரு. த.சிதம்பரப் பிள்ளை ஆசிரியர் அவர்களின் தலைமையின் கீழ் நடைபெற்றது. விழா மண்டபத்தில் நந்திக்கொடி கூட்டுறவுக்கொடி தமிழீழ தேசியக் கொடி என்பன பறக்கவிடப்பட்டிருந்தன.

சங்கத்தலைவர், பொது முகாமையாளர், பணியாளர்கள், முன் பள்ளி ஆசிரியர் என்போரால் மங்கல விளக்கேற்றப்பட்டு ஆலய பிரதான குருவின் ஆசியுரையுடனும், தேவாரா பாராயணத்துடனும் விழா மங்கலகரமாக ஆரமபிக்கப்பட்டது.

விழாவின் ஆரம்ப நிகழ்ச்சியாகசங்க முன்பள்ளி பாலர்களின கரகாட்டம் கிராமிய நடனம் தனிப்பாடல் குழுப்பாடல் கண்ணன் நடனம் ஆத்திகுடி, கொன்றை வேந்தன், திருக்குறள் ஓதுதல் என்பன இடம்பெற்றன. தொடர்ந்து மனோகரா பாலர் பாடசாலை ஆசிரியர் செல்வி. சி. சரசாங்கி அவர்களின் பக்திப்பாடல், சங்கீத ஆசிரியர்களும் வானொலிக் கலைஞர்களுமான

(6ம் பக்கம் பார்க்க...)

## உலக இந்து மாநாடு

# ஊர்காவற்துறை ப.நோ.கூ.சங்கத்தில் விமர்சையாகக் கொண்டாடப்பட்டது

இரண்டாவது உலக இந்து மாநாட்டை ஒட்டி ஊர்காவற்றுறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் பல வேறுபட்ட நிகழ்ச்சிகளை வெகுசிறப்பான முறையில் நடத்தியுள்ளது.

கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இரண்டாவது உலக இந்து மாநாடு ஆரம்பித்து வைக்கப்பட்ட தினமான 2ஆம் திகதி சங்கத்தலைவர் தி. சுந்தரலிங்கம் தலைமையில் இந்துமாநாட்டு நிகழ்வுகள் ஆரம்பமாகின.

இவ்விழாவினை புளியங்கூடல் கிராமசேவையாளர் திரு.மு. விஜயரத்தினம் ஊர்காவற்றுறை பலநோக்குக் கூட்டுறவச் சங்க பொது முகாமையாளர் ந.ஜெயராஜா ஆகியோர் மங்கல விளக்கேற்றி வைக்க, நந்திக் கொடியினை சைவப்புலவர் சிந்தாந்த பண்டிதர்

(6ம் பக்கம் பார்க்க)



யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபையினால் சங்கப்பணிப்பாளர்களுக்கு நடததப்பட்ட கனனிப் பயிற்சி நெறியில பயிற்சி பெற்றவர்களில் முதல் தொகுதி பணியாளர்கள் பயிற்சியை முடித்துக் கொண்டு வெளியேறிய போது நடைபெற்ற பிரிவுபசார விழாவில் சபைத்தலைவர் திரு.பெ.கனகசபாபதி, கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் (கணக்காய்வு) திரு.பொ.சிவலிங்கம்,ஆகியோர் உரையாற்றுவதையும் மாவட்ட கூட்டுறவுச் சபை தலைவர் பெ.கனகசபாபதி அவர்களிடம் பயிற்சியாளர் கே.கமலநாதன் அன்பளிப்புப் பொதியை வழங்குவதையும் படத்தில் காணலாம். படத்தில் விழாவிற்கு தலைமை தாங்கிய பயிற்சியாளர் கி.குணரத்தினம், மாவட்ட செயலாளர் சு.சிவசுப்பிரமணியம், போதனாசிரியர் எஸ்.பத்மநாதன் ஆகியோரும் காணப்படுகிறார்கள்.

உன்னே....

செங்கை ஆழியானின்

மீண்டும் ஒரு சீதை



குறுநாவல்

சர்வதேசத்தை உலுக்கும்

சார்ஸ்

# கூட்டுறவுத் துறையின் அபிவிருத்திக்கான பிரேரணைகள் மற்றும் வழிமுறைகள்

கூட்டுறவுத் துறையின் அபிவிருத்தி தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் பணிப்புரையின் பேரில் மின்சக்தி எரிபொருள்துறை அமைச்சர் கரு ஜெயசூரியா, கூட்டுறவுத்துறை அமைச்சர் அல்ஹாஜ் ஏ.ஆர்.எம்.அப்துல் காதர் ஆகியோரின் ஆலோசனைக்கு அமைய தயாரிக்கப்பட்டுள்ள அறிக்கையை கூட்டுறவு அமைச்சு வெளியிட்டுள்ளது.

கூட்டுறவு அமைச்சின் செயலாளர் சமணரீ ஹாலுகல்ல அவர்களின் வழிகாட்டலின் கீழ் கூட்டுறவுத் திணைக்கள அதிகாரிகள் கூட்டுறவாளர்கள் உட்பட 14 பேர்கள் இணைந்து இந்த அறிக்கையை தயாரித்துள்ளனர்.

கூட்டுறவுத் துறையின் அபிவிருத்திக்கான பிரேரணைகள் மற்றும் வழிமுறைகள் தொடர்பாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

## சர்வதேச கூட்டுறவு ஒப்பந்த அமைப்பினால் அங்கீகரிக்கப்பட்ட கூட்டுறவுக் கொள்கைகளை ஏற்றுக் கொள்ளல்

சுதந்திரமாக, சுயமாகச் செயற்படக்கூடிய இயக்கமாக மாறுவதற்கு வழி வகுக்கும் விதத்தில்- சர்வதேச கூட்டுறவு ஒப்பந்த அமைப்பினால் அங்கீகரிக்கப்பட்ட அடிப்படைக் கொள்கைக்கமைய தேசியக் கூட்டுறவுக் கொள்கை தயாரிக்கப்படவேண்டும்.

## சுய இயக்கம்

கூட்டுறவு இயக்கத்தை மக்களின் சுதந்திரமான இயக்கமாக அரசாங்கம் அங்கீகரிக்க வேண்டும். சுதந்திரமான அமைப்பு என்றவகையில் அதன் கொள்கைகளையும் பெறுமானங்களையும் அபிவிருத்தி செய்து மேம்படுத்துவதற்கான சட்ட மற்றும் நிர்வாக அமைப்புக்களை அரசாங்கம் வழங்கவேண்டும். அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகளிற் பங்கேற்பதற்கு கூட்டுறவு இயக்கத்திற்கு சந்தர்ப்பம் வழங்கும் விதத்தில் அரசாங்கத்திற்கும்-கூட்டுறவு இயக்கத்திற்குமிடையில் ஒழுங்கான கலந்துரையாடல்கள் இடம்பெறுவது அவசியம். கூட்டுறவு இயக்க மேம்பாட்டிற்கென அரசாங்கமோ அல்லது வேறு நிறுவனங்களோ உதவி செய்ய முன்வந்தால், அத்தகைய உதவிகள் குறிப்பிட்ட ஒரு காலத்திற்கு மட்டுப்படுத்தப்பட வேண்டும். அத்தகைய உதவிகள் கூட்டுறவு இயக்கத்தின் சுதந்திரத்திற்கும், நிலைபேறான தன்மைக்கும் பங்களிக்கும் வகையில் அமைவது அவசியம்.

## தேர்தல்கள்

கூட்டுறவுச் சங்கங்களின் குழுக்கள் மற்றும் பணிப்பாளர் சபைகளுக்கான தேர்தல்கள் சம்பந்தப்பட்ட மட்டில் எந்தவொரு அரசியல் கட்சியிலும், தொழிற் சங்கத்திலும் பதவி வகிக்கும் எவரும் இவ்வாறான குழுக்களுக்கும் சபைகளுக்கும் தேர்ந்தெடுக்கப்படுவதற்குத் தகுதியுடையவராக மாட்டார். குழுக்களுக்கும் சபைகளுக்குமான அங்கத்தவர்களை பெரும்பான்மை வாக்குகளின் அடிப்படையில் - அங்கத்தவர்களே தெரிவு செய்ய உதவும் வகையில் சட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும்.

குழு அல்லது சபைக்கு ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமானால் சம்பந்தப்பட்ட நபர் கூடியஅளவிலான பங்குகளை கொள்வனவு செய்திருக்க வேண்டும். பாவனையாளர் சங்கமாக இருந்தால்- பெருமளவு பொருட்களை அந்தச் சங்கத்திடமிருந்து வாங்கியோ அல்லது சங்கத்துக்கு வழங்கியோ இருக்க வேண்டும். இதனைத் தவிர - பணிப்பாளர் சபையில் குறைந்தது 3 அங்கத்தவர்களுக்காவது நிதி, முகாமைத்துவம், வர்த்தக நடவடிக்கைகளில் அடிப்படை அறிவு இருப்பது அவசியம். சம்பந்தப்பட்ட சங்கத்தின் செயலாளர் தேர்தல் பற்றிய சகல நடவடிக்கைகளுக்கும் பொறுப்பாக இருப்பார். குறிப்பிட்ட காலங்களில் தேர்தல்கள் நடைபெறுவதைக் கண்காணிக்கும் பொறுப்பு கூட்டுறவுத் திணைக்களத்தைச் சார்ந்ததாகும். குழு அல்லது சபையின் பதவிக்காலம் 3 வருடங்களாக இருப்பது உசிதமாகும்.

## ஒழுக்க வழிமுறைகள்

சங்கம் ஒன்றின் பணிப்பாளர் சபையினால் அல்லது ஊழியர்களினால் இழைக்கப்பட்ட குற்றத்திற்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்க உதவும் வகையில் ஒழுக்க வழிமுறைகள உருவாக்கப்படவேண்டும். அவ்வாறு குற்றமிழைத்தோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளும் உரிமை சங்கத்தின் அங்கத்தவர்களுக்கு இருப்பது அவசியம்.

## பங்குகளும் பங்கு லாபங்களும்

கூட்டுறவு சங்கமொன்றின் அல்லது சமாஜத்தின் பங்கொன்றின் பெறுமதியை பங்குகளும் பங்கு இலாபங்களும் கூட்டுறவு சங்கம் ஒன்றின் அல்லது சமாஜத்தின் பங்கொன்றின் பெறுமதியைத் தீர்மானிக்கும் உரிமை சங்கத்தின் அங்கத்தவர்களுக்கு உண்டு. உத்தேச வர்த்தக நடவடிக்கைகள்- கூட்டுறவுச்சங்கங்களின் அலுவல்களில் அங்கத்தவர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படும் அர்ப்பணிப்பின் பங்கு -என்பனவற்றை கருத்திற் கொண்டு நியாயமான அடிப்படையில் இதனை தீர்மானிக்க முடியும். தற்போது செயற்படும் கூட்டுறவுச்சங்கங்கள் சம்பந்தப்பட்ட மட்டில் சொத்துக்கள் -பொறுப்புக்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டதை தொடர்ந்து அங்கத்தவர்களின் பங்குகளினது பெறுமதி தீர்மானிக்கப்படவேண்டும்.புதிய அங்கத்தவர்கள் சேர்க்கப்படுகையில் ஒரு பங்கின் பெறுமதிக்கு சமான தொகையை -அங்கத்தவர்கள் செலுத்தவேண்டும் என்ற உப விதிகள் திருத்தப்படுவது அவசியம்.அதே சமயத்தில் தாங்கள் வாங்கிய பங்குகளுக்கான பங்கு இலாபங்களை அங்கத்தவர்கள்பெற உதவும் விதத்தில் சட்டங்கள் திருத்தப்பட வேண்டும் வருட முடிவில் இலாப-நட்ட கணக்கறிக்கை தயாரிக்கப்பட்டு இலாபத்தில் ஒரு பகுதி முதலீடுகளுக்கென ஒதுக்கப்பட்டதும், எஞ்சிய தொகை ஒவ்வொரு அங்கத்தவரினதும் பங்குகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் அவர்களுக்கு விநியோகிக்கப்படும்.

## அங்கத்துவம்

ஜனாதிபதிஆணைக்குழுவின் அறிக்கையின் பிரகாரம்- விண்ணப்பதாரர் அங்கத்துவம்,இணைந்த அங்கத்துவம்,பூரண அங்கத்துவம் கௌரவ அங்கத்துவம் என 4 பிரிவுகளாக அங்கத்தவம் பிரிக்கப்பட்டுள்ளது. ஒரு வருட காலம் இணைந்த அங்கத்தவராகஇருந்த ஒருவர் அந்தக்காலப்பகுதியில் பங்குகளின் முழுப்பெறுமதியையும் செலுத்தியதும் பூரண அங்கத்துவத்தைபெறமுடியும் எனப்பிரேரிக்கப்பட்டுள்ளது.

இணைந்த அங்கத்தவராக அவர் ஆற்றிய கடமைகள் மதிப்பீடு செய்யப்பட்டு பூரண அங்கத்துவம வழங்கப்படும் வரை அந்தக்காலப்பகுதியில் கூட்டுறவு நடவடிக்கை களில் குறிப்பிட்ட அங்கத்தவர் பங்கு பற்றினாலும்-கூட்டங்களில் வாக்களிக்கும் உரிமை வழங்கப்படக் கூடாது. இந்த வகையில் ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையிற் தெரிவிக்கப்பட்ட பிரகாரம் அங்கத்தவர்கள் இடாப்பை மீளாய்வு செய்தலும், ஈடுபாடு கொண்டுள்ள அங்கத்தவர்கள் மாத்திரம் இடம் பெறும் வகையில் கூட்டுறவுச்சங்கங்களை மீள்பதிவு செய்தலும் உசிதமானதாகும்.

## தாராள பொருளாதாரத்தின் சவால்களை எதிர் கொள்ளல்

இலங்கையில் தாராள பொருளாதார நடடிக்கைகள் 1977ன் பின்னர் ஆரம்பிக்கப்பட்ட போதிலும்கூட்டுறவுத் துறையின்போக்கில் மாற்றம் எதுவும் ஏற்படவில்லை. இந்தவகையிற் சில மாற்றங்களை கூட்டுறவுத்துறை அமைச்சும்-கூட்டுறவுத்திணைக்களமும் நடைமுறைக்கிட்ட போதிலும் அவற்றினால்பெற்றுக்கொள்ளப்பட்ட பெறுபேறுகள் போதியதாக இல்லை. கூட்டுறவு இயக்கம்-உலகமயமாக்கல்,தாராள சந்தைப் பொருளாதாரம் என்பவற்றின் சவால்களை எதிர் நோக்க வேண்டுமானால் தற்போதுஉள்ள தடைகள் அகற்றப்பட்டு, சுதந்திரமான அமைப்பாக அது செயற்பட வழிவகுக்கும் விதத்தில் அமைப பிலும்,போக்கிலும் மாற்றமடையவேண்டியது அவசியமாகும்.

## ஊழியர் பிரச்சினைகள்

கூட்டுறவு ஊழியர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஒரே ஒரு மூவர் குழு இருத்தல் வேண்டும். பிரச்சினைகள் துரிதமாகத் தீர்க்கப்படுவதும் அவசியம். இதற்கென தற்போதுள்ள கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழுவைகலைத்து விட்டு,அதற்குப்பதிலாக கூட்டுறவு மூவர் சபையை அமைக்கும் படி ஜனாதிபதி ஆணைக்கு அறிக்கையிற்பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.கூட்டுறவுத் துறைக்கும் அதன் ஊழியர்களுக்கும் நன்மை தரும விதத்தில் மேன்முறையீடு செய்வதற்கான வழி முறைகள் என்பன சம்பந்தமான கொள்கைகளை இந்தக்கூட்டுறவு மூவர் சபை தயாரிக்கும். (வளரும்)

> **கூட்டுறவுச் சிந்தனை**
>
> கூட்டுறவு ஒரு அமைப்பு மட்டுமன்று, மக்களின் இதயத்தில் எழுகின்ற ஊக்கஉணர்வுமாகும். எனவே தொழிற் துறையில் கடைப்பிடிக்கப்படும் ஒருமதந் தான் கூட்டுறவு. சுயநிறைவும் சேவையும் தான் அதன் வேத வாக்கு
>
> -சேர் டார்விங்

# கூட்டுறவு இயக்கம் பற்றிய அறிமுகம்

### கூட்டுறவு என்றால் என்ன?

குறிப்பிட்ட ஒரு இலக்கினை அடையும நோக்கத்துடன் ஒன்றுக்கு மேற்பட்ட பலர் தமக்குள் ஐக்கியப்பட்டுத் தாமாகவே முன்வந்து தொழிற்படுதலே "கூட்டுறவு" என்பதாகும் "கூட்டுறவு" என்பதன் சாதாரண கருத்து "கூடி உழைத்தல்" ஆகும் கூட்டுறவு என்பதன ஆங்கிலப்பதம் "COOP-ERATION" என்பதாகும். இது இலத்தீன் சொல்லான "CO-OPERARI" என்பதிலிருந்து தோன்றியதாகும். இங்கு "CO" என்பது ஒன்று பட்டு, கூடி என்ற கருத்தினை வெளிப்படுத்துகின்றது. "OPERARI" என்பது தொழிற்படுதல் அல்லது செயற் படுதல் என்ற கருத்தினைப் புலப்படுத் துகின்றது.

### கூட்டுறவின் வரைவிலக்கணம்

"கூட்டுறவு" என்பதனை பல அறிஞர்கள் பல்வேறு வகையில வரைவிலக்கணப் படுத்தியுள்ளனர். "கூட்டுறவு"க்கு வரை விலக்கணம் கூறியவர்கள் தாங்கள் வாழ்ந்த சமூக, பொருளாதார பின்னணிகளையும், அவரவர் வாழ்ந்த காலப் பகுதிகளையும் மையமாகக் கொண்டே வரைவிலக்கணப்படுத்தியுள்ளமையையும் அவதானிக்க முடியும். இவற்றில் எச்.கல்வேட் என்பவரது வரைவிலக்கணமே மிகப்பொருத்தமானதொரு வரைவிலக்கணமாக பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இவரது வரைவிலக் கணமானது எக்காலத்துக்கும் பொருத்த மானதாகவும், எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப் பட்டதாகவும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

"மக்கள் தங்களின் பொதுப் பொருளாதார தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு, எவ்வித கட்டாயமும் இன் றித்தாமாகவே முன் வந்து மனிதர்கள் என்ற ரீதியில் சமத்துவ அடிப்படையுடன் ஜனநாயக முறையில் ஒருங்கிணைந்து இயங்கும் முறையே கூட்டுறவு" ஆகும்.

இவ் வரைவிலக்கணத்தினை நாம் நுணுக்கமாக ஆராய்ந்து பார்ப்போமானால் கூட்டு றவு இயக்கத்தினது தனித்துவமும் புனிதமும் வெளிப்படும்.

### கூட்டுறவின் அடிப்படைப் பண்புகள்

கூட்டுறவு என்பது ஒரு தனித்துவம் மிக்க புனிதமான அமைப்பு ஆகும். இந்தக் கூட்டுற வின் அடிப்படைப் பண்புகளாவன:

01. சுய உத்வி, பரஸ்பர உதவி
02. சிக்கனம் என்பவை ஆகும்.

இதில் சுய உதவி என்பது ஒருவர் தனது தேவைகளைத் தானே நிறைவேற்றிக் கொள்ளுதல் ஆகும். பரஸ்பர உதவி என்பது ஒருவர் செய்த உதவிக்கு கைமாறாக அவருக்கு இன்னொருவர் உதவிசெய்தலே பரஸ்பர உதவி ஆகும். எனவே இங்கே ஒருவர் மற்றவர்களுக்கு உதவி செய்வதன் மூலம் தனக்குத் தானே உதவுகின்றார் என்ற ஒரு உயர்வான தத்துவம் வெளிப்படுவதை நாம் உணரலாம். இத்தத்துவமானது "ஒருவர் பலருக்காகவும், பலர் ஒருவருக்காகவும்" இணைந்து செயற்பட்டு பொருளாதாரத் தினை அபிவிருத்தி செய்து கொள்ளு தலைக் குறிக்கும்.

சிக்கனம் என்பது ஒருவர் தனக்குக் கிடைக கும் வருமானத்தினைத் திட்டமிட்டு செலவு செய்தல் ஆகும். சிக்கனம் என்பது ஒருசிறந்த பண்பு என்பதனை நாம் எல்லோரும் அறிவோம். எந்த ஒரு மனிதன் தனது வருமானத்துக்கு ஏற்ப செலவுகளைத் திட்டமிட்டுச செய்ய முற்படுகின்றானோ அன்று முதல் அவன் பொருளாதார ரீதியில் உயர்வடைய ஆரம்பிக்கின்றான்.

அத்தகைய உயர் தத்துவங்களையும், பண்புகளையும் கொண்டதுதான் "கூட்டுறவு" ஆகும்.

### கூட்டுறவின் தோற்றம்

ஐரோப்பிய நாடுகளில் கைத்தொழிற் புரட்சியைத் தொடர்ந்துஇங்கிலாந்து தேசத்தில் 19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் கூட்டுறவு இயக்கம் தோற்றம் பெற்றது. 18 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் கைத் தொழில் புரட்சியினால் உலகில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. இக்கைத் தொழில் புரட்சியினால் மக்களுக்குச்சாதகமான விளைவுகளும், இதே வேளையில்பாதகமான விளைவு களும் ஏற்பட்டன. கூட்டுறவின் தோற்றத்துக்கு இந்த கைத்தொழில் புரட்சியின் போது ஏற்பட்ட சமூக பொருளாதார விளைவுகள் காரணமாக அமைந்தன. பொருளாதார முறைமைகள் மாற்றம் அடைந்தன. முதலாளித்துவப் பொருளாதாரம்தோற்றம் பெற்றது. முதலாளித்துவ சுரண்டலினால் பாதிப்படைந்து தொழிலாளர் வர்க்கத்தின் ஓர் இயக்கமாகவே இக் கூட்டுறவு இயக்கம் தோற்றம் பெற்றது.

1844ஆண்டு இங்கிலாந்தில றோச்டேல் நகரில் முதன் முதலில் 28நெசவு ஆலை தொழிலாளர்கள் நிறுவிய நுகர்வுக் கூட்டுறவுச் சங்கமே உலகில் முதலாவதாக வெற்றிகரமாக நிறுவப்பட்ட கூட்டுறவுச் சங்கம் ஆகும்.

1844ஆம் ஆண்டுக்கு முன்னரே கூட்டுறவு இயக்கம் பற்றிய சிந்தனையை மக்கள் மத்தியில் "றொபேட் ஓவன்" வில்லியம் சிங் போன்ற அறிஞர்கள் பரப்பி வந்தனர். இவர்களின் கூட்டுறவு பற்றிய சிந்தனையினால் தூண்டப்பட்ட தொழிலாளர்கள் பல்வேறு காலகட்டங்களில் கூட்டுறவுசங்கங்களை அமைத்தனர் எனினும் 1844ஆம் ஆண்டுவரை இங்கிலாந்து தேசத்தில் அமைக்கப்பட்ட கூட்டுறவு அமைப் புக்கள் யாவும் பல்வேறு காரணங்களினால் தோல்வியிலேயே முடிவ டைந்தது. எனினும் 1844ஆம் ஆண்டில் றொச்சேடல் நகரில் இந்த கூட்டுறவுச் சங்கத்தினை நிறுவிய இந்த 28நெசவுத் தொழி லாளர்களும் ,தங்களுக்கான சில கட்டுப பாடான விதிமுறைகளை வகுத்து மிகக் கண்டிப்பான முறையில் அதனைக் கடைப் பிடித்து இச்சங் கத்தினை நடைமுறைப்படுத்தி வந்ததினாலேயே இவர்களினால் ஒரு வெற்றி கரமான கூட்டுறவுச் சங்கத்தினை நிறுவ முடிந் தது. இவர்கள் நிறுவிய கூட்டுறவுச் சங்கம் பிற் காலத்தில் பெருவெற்றி பெற்று,கூட்டுறவு இயக்கம் பல்வேறு நாடுகளுக்கும் பரவிவளர்ச்சியடையக் காரணமாக அமைந்தது.உலகில் கூட்டுறவுச் சங்கங்கள் முன்னேற்றம் அடைய இவர்களால் அமைக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கமே முன்னோடியாக அமைந்தது.எனவேதான் இந்தக் கூட்டுறவுச் சங்கத்தை அமைத்த 28 நெசவுத்தொழிலாளர்களையும் "கூட்டுறவு இயக்கத்தின் முன்னோடிகள்"அல்லது "றொச்டேல் முன்னோடிகள்"என அழைக்கப் படலாயினர்.இத்தகைய ஒரு கூட்டுறவு அமைப்பு உலகில் தோற்றம் பெறவேண்டும் என்ற சிந்தனையுடன், கைத்தொழிற் புரட்சியின் கடுமையான தாக்க காலப் பகுதியென பொருளாதார ஆசிரியர்களினால் வர்ணிக்கப்படுகின்ற 19-ம் நூற்றாண்டின் ஆரம்பகாலப் பகுதியில் இருந்தே மக்கள் மத்தியில் கூட்டுறவுச் சிந்தனையைத் தூண்டியவர்களில் "றொபேட் ஓவன்" அவர்கள் மிகமுக்கியமானவராவார். இவருடைய கூட்டுறவுச்சிந்தனையால் தூண்டப்பட்ட மக்களே கூட்டுறவு சங்கங்களை அமைக்க முற்பட்டனா. எனவே "றொபேட் ஓவன்" அவர்களை கூட்டுறவின் தந்தையென அழைக்கின்றார்கள்.

**வீ.கே.சிவராசசுந்தரம்.**

# சர்வதேசத்தை உலுக்கும் சார்ஸ்

2003ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 26ந் தேதி சீனாவின் நாங்டாங்கிலிருந்து பிரபல வர்த்தகரொருவர் வியட்நாமிலுள்ள ஹனோய் நகருக்கு விமானம் ஏறினார். ஏறியதிலிருந்தே அந்த 48 வயதுக்காரருக்கு தலைவலியும் உடல் வலியும் பாடாய்ப்படுத்தின. விமானம் ஹனோயில் தரையைத் தொட்ட போது கடும் காய்ச்சலும் வறட்டு இருமலும் சேர்ந்து கொண்டது. இறங்கியதுமே அவரை மருத்துவ மனையில் சேர்த்தார்கள். ஆனால் சிகிச்சை பலனளிக்காமல் இறந்து போனார்.


அவரைக் கொன்ற வியாதி எது என்று யாராலும் சொல்ல முடியவில்லை. ஆனால் அவர் நோய் வாய்ப்பட்டிருந்த போது அவருடன் நெருக்கமாக இருந்தவர்கள் அனைவருக்கும் அந்த நோய் தொற்றியது. மருத்துவமனையில் அவருக்கு சிகிச்சை தந்த டாக்டர்கள் நர்ஸ்களுக்கும் கூட அவருக்கு இருந்த மாதிரியே நிமோனியாவுக்கான அறிகுறிகள் தெரியஆரம்பித்தன.

மார்ச் 15க்குள் உலகளவில் 5பேர் இந்த மர்மநோயால் இறந்து போனார்கள் 150 பேர்கள் பாதிக்கப்பட்டார்கள். உடனே உலக சுகாதார அமைப்பு உலக நாடுகளை உஷார்படுத்தியது.

உலகை உலுக்கி வரும் இந்த மர்மமான ஆட்கொல்லி நோயை சிவியர் அக்யூட் ரெஸ்பிரேட்டரிசிண்ட்ரோம் (சார்ஸ்) என்கிறது உலக சுகாதார அமைப்பு. ஆரம்பத்தில் ஹாங்காங், சிங்கப்பூர், வியட்நாம் போன்ற ஆசிய நாடுகளில் மட்டுமே இருந்த சார்ஸ் சர்வதேச விமானப் பயணங்களின் தயவால் உலகம் சுற்ற ஆரம்பித்திருக்கிறது. எனவே இப்போது உலகம் முழுவதும் சார்ஸ் பீதி பரவியிருக்கிறது. ஈராக், போரினால் நாளுக்கு நாள் சாவு எண்ணிக்கைஅதிகரிப்பது போல சார்ஸினால் இறப்பவர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்க ஆரம்பித்திருக்கிறது. ஏப்ரல் 2க்குள் சார்ஸால் உலகெங்கும் 2200பேர் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் 78பேர் இறந்திருப்பதாகவும் உலக சுகாதார அமைப்பு சொல்கிறது. சார்ஸால் இறந்தவர்களில் சார்ஸ் பற்றி உலக நாடுகளின் கவனத்துக்கு கொண்டு வந்த அந்த ஹனோய் டாக்டரும் அடங்குவார்.

21ம் நூற்றாண்டின் மிகச் சவாலான தொற்று நோயாகக் கருதப்படும் இந்த 'சார்ஸ்' எப்படி உற்பத்தியாகிப் பரவுகிறது என்பதை ஆராய ஆரம்பித்த விஞ்ஞானிகள் இந்த நோயைப் பரப்புவது ஒரு வைரஸ்தான் என்று ஆரம்பத்திலேயே அடையாளம் கண்டார்கள். இன்புளுயன்ஸா வைரஸ், அடினோ வைரஸ் போன்ற ஒரு வைரஸ் ரகம்தான் இது என்கிறார்கள் அவர்கள்.

இதற்கிடையில் மணல் வாரி மற்றும் பொன்னுக்கு வீங்கி நோய்களை ஏற்படுத்தும் வைரஸ்களின் குடும்பத்தைச் சேர்ந்த பாராமிக்சோ என்ற வைரஸ் குடும்பத்தைச் சேர்ந்த ரகம்தான் இது என்று ஜெர்மனி மற்றும் ஹங்காங் டாக்டர்கள் கருதினார்கள். ஆனால் சாதாரண ஜலதோஷத்தை ஏற்படுத்தும் கரோனா வைரஸ் என்ற குடும்பத்தைச் சேர்ந்ததைப் போல இது



## சார்ஸ் அறிகுறிகள்

- சார்ஸ் வைரஸ் தாக்கியதன் 'முதல் அறிகுற' சாதாரண தலைவலியும் உடம்பு வலியும்தான்.
- அறிகுறிகள் நிமோனியாவை ஒத்திருக்கும. 100.4 டிகிரிக்கும் அதிகமான கய்ச்சல் ஏற்படும்.
- காய்ச்சலுடன் வறட்டு இருமலும் சேர்ந்து கொள்ளும்.
- மூச்சுவிட சிரமம் ஏற்படும்.கடைசியில் மூச்சுக் கோளறு ஏற்படும்.
- சிலருக்குத் தோலில் தடிப்புகள் ஏற்படும்.

இருக்கிறது. என்றார்கள் அமெரிக்க டாக்டர்கள்.

சார்ஸ் அறிகுறி எந்த வைரஸால் உண்டாகிறது என்பது பற்றி இப்படி பல தரப்பட்ட கருத்துக்கள் இருப்பதால் குழப்பமே மிஞ்சுகிறது. கரோனோ வைரஸ் தான் ஆட்கொல்லி, புரோமிக்சோ வைரஸ் ஆபத்தில்லாதது என்கிற ஒரு கருத்து, மற்றொன்றோ பராமிக்சோ வைரஸ் தான் ஆட்கொல்லி கரோனா வைரஸ் பரமசாது என்கிறது. இரண்டு வைரஸ்களும் கைகோர்த்துக் கொள்ளும் என்றது இன்னொரு கருத்து. கரோனோ வைரஸ் நோயாளியின் நோய் எதிர்ப்பு சக்தியை பலவீனப்படுத்தும். பின்னர் பராமிக்சோ வைரஸ் நோயாளியின் எதிர்ப்பில்லாத உடலில் புகுந்து விளையாடி ஆளைக் கொல்லும் இன்னும் சிலர் இந்த இரண்டு வைரஸ்களுமே காரணமில்லை;

சார்ஸ் அறிகுறியைத் தரும் வைரஸ் இன்னும் கண்டுபிடிக்கப்படாமலே இருக்கிறது என் கிறார்கள்.

இந்த வைரஸ்எப்படி வந்தது? சீனாவிலிருக்கும் ''நாங்டாக்கை'' இந்த நோயின் பிறப்பிடமாகச் சொல்லலாம். 2002 நவம்பரில் நிமோனியா போன்ற ஒரு நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் மருத்துவமனைகளை அணுகினார்கள். அந்த நோய் தான் தற்போதைய சார்ஸ் என்று நம்பப்படுகிறது. ஹாங்காங்கிலிருக்கும் உலக சுகாதார அமைப்பின் விஞ்ஞானிகள் அங்கிருக்கும் விலங்குகளைத்தான் அந்த நோய் முதலில் தாக்கியிருக்கும் என்று நம்புகிறார்கள். ''இந்த வைரஸ் மனித உடலில் நுழைந்ததும் மனிதனின் நோய் எதிர்ப்பு சக்திக்கும் இந்த வைரஸ்க்கும் ஒரு பெரும் போரே நடக்கிறது'' என்கிறார் தில்லி சப்தர் ஜங் மருத்துவமனையின் சுவாசநோய்த் துறையின் தலைமை டாக்டர் ஜே.சி.சூரி.

நோய் எதிர்ப்பு சக்தி குறைவாக உள்ளவர்களின் உடலில் நுழையும் இந்த வைரஸ் நுரையீரலில் நுழைந்து திசுக்களை அழித்து மூச்சுக் கோளாறை ஏற்படுத்தும். இரண்டிலிருந்து 10 நாட்களுக்குள் இந்த அறிகுறி தெரியும். இந்த நோய்த் தொற்று உள்ளவர்களைத் தொடுவதன் மூலமும் நோயாளிகளின் தும்மல், இருமல் மூலம் காற்றிலும் இது பரவக் கூடியது. கிட்டத்தட்ட ஃப்ளுஜுரத்தின் அறிகுறி போலவே இதற்கும் இருப்பதால் அது



சார்ஸ் நோயின் அறிகுறி தானா என்று கண்டு பிடிப்பதே கஷ்டம்தான். ஆனால் இன்ஃப்ளுயென்சா வைரஸ் பரவும் வேகத்தை விட இதன் வேகம் கம்மி என்பதும் சார்ஸ் தொற்றியவர்களில் 5 சதவீதத்தினருக்கே மரணம் ஏற்படுகிறது என்பதும் ஆறுதலான விஷயம்.இதற்கென்று தனியாக மருந்துகள் கண்டுபிடிக்கப்படாவிட்டாலும் சில வைரஸ் - எதிர்ப்பு மருந்துகளையும் ஸ்டெராய்களையும் ஹாங்காங் மருத்துவர்கள் பயன்படுத்துகிறார்கள். இதற்கு பலனும் இருக்கிறது.

தொகுத்தவர்
மகிழன்.

ஆதாரம் -இந்தியா ருடே

## பிரமச்சாரிகளான அறிஞர்கள்

★ சிறந்த தத்துவ ஞானியான காண்ட் இரண்டுமுறை திருமணம் செய்ய முயன்று தோல்வி அடைந்தார். தன் வாழ் நாளில் காண்ட் திருமணமே செய்து கொள்ளவில்லை.

★ புகழ் பெற்ற எழுத்தாளரான எட்வர்ட் கிப்பன் மதகுருவின் மகளை காதலித்தார்.மதகுரு காதலுக்கு ஒப்புதல் அளிக்காததால் அவர் வாழ் நாள்முழுவதும் பிரமச்சாரியாகவே காலத்தைக் கழித்தார்.

★ அறிவியல் மேதை ஐசக் நியூட்டன் ஸ்டோரி என்ற பெண்ணைத் திருமணம் செய்ய முயன்றார்.பிறகு திருமணம் தனது அறிவியல் ஆய்வுகளுக்கு இடையூறாக இருக்கும் என்று எண்ணி திருமணம் செய்வதைக் கைவிட்டார்.

★ பிரபல ஆங்கில எழுத்தாளரான சார்ள்ஸ்லேம்ப் தனது பரம்ரையல் மன நோய் தொடர்வது காரணமாகத் திருமணம் செய்து கொள்ளவில்லை.

★ உலகப் புகழ் பெற்ற மோனலிசா ஓவியம் தீட்டிய லியர் னாடோடாவின்சி காதல் என்றாலே காத தூரம் ஓடினார். இறுதி வரை பிரமச்சாரியாகவே வாழ்ந்தார்.

★ பிரபல இசை மேதை பீத்தோவன் தனது தந்தையின் அச்சுறுத்தலுக்குப் பயந்து பெண்கள் பக்கமே தலை காட்ட வில்லைஇறுதிவரை 'பியானோ' வுடன் தான் குடும்பம் நடத்தினார்.

★ அலெக்சாண்டர் போப் என்ற எழுத்தாளர் தனது தாயை பராரிப்பதற்காக திருமணத்தை உதறித் தள்ளினார்.

★ உலகப் புகழ் பெற்ற சிந்தனையாளரான ஹெறல் பர்ட் ஸ்பென்சர் ஏகாந்தமே இனிது என்று இறுதி வரை தனி மனிதனாக வாழ்ந்து வந்தார்.

★ பிரபல எழுத்தாளரான ஜொனாதன் ஸ்விஃப்ட் இரண்டு முறை காதல் வயப்பட்டும் திருமணம் செய்து கொள்ள வில்லை.

★ பிரபல அமெரிக்கக் கவி வால்ட் விட்மன், ஆன்டர்சன், வால்டோர்,மெக்காலே,மைக்கோல், ஏஞ்கலோ போன்ற வர்களும் தனிமையாகவே இனிமை கண்டார்கள் திருமண பந்தத்தில் சிக்கிக் கொள்ளவே இல்லை.

## 2003 யூன்மாத கல்விப்பயிற்சி வகுப்புக்களும், கருத்தரங்குகளும்

- 10.06.2003 - கொடிகாமம் ப.தெ.வ.அ.கூ சங்கக்குழுப் பயிற்சி.
- 12.06.2003 - யாழ்ப்பாணம் ப.தெ.வ.அ.கூ. சங்கம் கிளைக் குழுப்பயிற்சி.
- 14.06.2003 - தெல்லிப்பழை ப.நோ.கூ.சங்க கிளைக்குழுத் தலைவர்கள்உபதலைவர், செயலா ளர்கள் பயிற்சி வகுப்பு.
- 17.06.2003 - கரவெட்டி ப.தெ. வ.அ.கூ சங்கக் கிளைக்குழுப் பயிற்சி வகுப்பு.
- 19.06.2003 -தெல்லிப்பழை ப.தெ.வ.அ.கூ. சங்க கிளைக்குழு பயிற்சி வகுப்பு.
- 21.06.2003 - சாவகச்சேரி ப.நோ.கூ.சங்க கிளைக்குழு தலைவர்கள், உபதலைவர்கள், செயலாளர்கள் பயிற்சி வகுப்பு.

## தெரிந்து கொள்ளுங்கள்

MATO - வட அத்திலாந்திக் ஒப்பந்த நிறுவனம் (NOTTH ATLANTIC TREATY ORGANIZATION)
ADB - உலகவர்த்தகநிலையம் WORLD TRADE ORGANIZATION

ILO - சர்வதேச தொழிலாளர் ஸ்தபனம்
UNO - ஐக்கிய நாடகள் சபை UNITED NATIONS OF ORGANIZATIONS
UNICEF - ஐக்கிய நாடுகள் குழந்தைகள் நிதியம்
NUHCR - ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலயம்
WAO - உலக சுகாதார ஸ்தாபனம் WORLD HEALTH ORGANIZATION
EEC - ஐரோப்பிய பொருளாதர சமூகம்
OPEC - பெற்றோலிய ஏற்றுமதி நாடுகளின் அமையம் ORGANIZATION
NASA - தேசிய விண்வெளி ஆய்வு நிலையம் NATIONAL AERON AUTICS ANDSPACE ADMINISTRATION
BBC - பிரித்தானிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம். BRITISA BROAD CASTING CO-OPERATION
UNS - ஐக்கிய அமெரிக்க அரசு UNITED STATES OF AMERICA
PLO - பலஸ்தீனவிடுதலைஇயக்கம் PALASTINE LIBERATION ORGANIZATION

## எழுதுங்கள் எழுதுங்கள் வரவேற்கிறோம்

யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபையினால் வெளியிடப்படும் ஐக்கியதீபம திங்கள் இதழுக்கு உங்களுடைய ஆக்கங்களை - கதைகளாக, கவிதைகளாக, துணுக்குகளாக, பொது அறிவு சம்பந்தமானவிடயங்கள் பல்சுவை விருந்தளிக்கக் கூடிய வகைகளில் பிரதி மாதமும் 10ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்கவும். தரமானவை பிரசுரிக்கப்படும்.

► மற்றும் சங்க நிகழ்வுகள் தொடர்பான செய்திகள், படங்கள் ஆகியவற்றையும் அனுப்பிவைக்கவும்.

வந்துசேரவேண்டிய முகவரி
*ஆசிரியர்,*
*''ஐக்கிய தீபம்''*
*யாழ்.மாவட்டக் கூட்டுறவுச்சபை,*
*கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டப 2ஆம் மாடி,*
*இல:12, காங்கேசன்துறைவீதி,*
*யாழ்ப்பாணம்.*



வலிகாமம் பனை - தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியின் பனஞ்சாராய வடிசாலையில் தயாரிக்கப்பட்ட சாராயத்தைப் போத்தலில் அடைக்கும் பகுதியை கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் (பனை-தென்னைவளம்) திரு.சு.கணேசமூர்த்தி பெயர்ப்பலகையை திரைநீக்கம் செய்தபோது பிடிக்கப்பட்ட படம். படத்தில் கொத்தணியின் தலைவர் திரு.க.மெய்யழகன், பொது முகாமையாளர், பணியாளர்கள் காணப்படுகிறார்கள்.

# மீண்டும் ஒரு சீதை

## குறுநாவல்

**செங்கையாழியான்**

**அமரர் ராமரத்தினம் நினைவாக கலைமகள் நடத்திய குறுநாவல் போட்டியில் முதல் பரிசு பெற்ற செங்கையாழியானின் குறுநாவல் இங்கு பிரசுரமாகிறது. (ஆ-ர்)**

''அங்கு உன்னை ஆமிக்காரர் சும்மா விட்டிருப்பான்களா?'' காயத்திரியின் சர்வ அங்கமும் அவனுடைய இந்த வார்த்தைகளின் தீயில் கருகிப் போயின. குறி தவறாது அவள் இதயத்தினை கூரிய ஊசியாக அவன் சொற்கள் ஊடுருவின. நிலம் பிளந்து அவளை விழுங்கிக் கொள்வது போன்ற பிரமையில் அபபடியே நிலத்தில் பொத்தென அமர்ந்துவிட்டாள்.

(ஜ) யன்னலூடாகப் பார்க்கும் போது வெளியே கவலையின் கரிய இருள் அப்பிக்கிடக்கின்றது. கொய்யாமரத்தின் இருள் பரவலுள் வௌவ்வால்கள் விழுந்து எழுகின்றன.

வருடம் முழுவதும் காய்த்துக் கொட்டும் கொய்யாமரம் வீட்டில் எவரும் இல்லாத வேளையில் அவள் அம்மரத்தில் ஏறி கிளைகளை வளைத்து முற்றிய கனிகளை பறித்துக் கொள்வாள். அம்மா அதனைக் கண்டாள் திட்டித் தீர்ப்பாள்.

''ஏய் காயத்திரி, என்னடி இந்தப் பழக்கமெல்லாம். ஆம்பிளைப் பிள்ளையள் மாதிரி மரத்திலே ஏறி விழுந்து கிழுந்து தொலைக்கப் போகிறாய். கைகால் ஒடிந்தால் தெரியும் குமர்ப்பிள்ளை... ஆமாகவிருந்தாலே ஒருத்தனைப் பிடிக்கிறது கஷ்டம் ஊனமானால் சொல்லத்தேவையில்லை...''

அம்மாவின் ஒப்பாரி அவளை எதுவும் செய்யாது. அவள் கொய்யாக்கனியை கடித்து வைத்தபடி சிரிப்பாள்.

''ஏனம்மா பயப்படுகிறாய்?'' எனக்கினி ஒருத்தன் பிறந்தா வரப் போகிறான்? அதுதான் என்னத் தான் ராகவன் எனக்காக இருக்கிறாரே! முடமானால் என்ன, ஊனமானால் என்ன ஏற்றுக்கொள்வார்...'' என்று அவள் சொல்ல விரும்பினாள். ஆனால் சொல்ல முடியவில்லை. சிறு வயதிலேயே காயத்திரிக்கும் ராகவனுக்கும் முடிச்சிட்டுப் பேசிவிட்டார்கள். ராகவன் அவள் மாமன் மகன். இருவருக்கும் இடையில் உறவு நாளொரு வண்ணமாக வளர்ந்து விட்டது.

அவளுக்கு அந்த நாள் நல்ல நினைவில் இருக்கின்றது. அடுக்களையில்அம்மா வேலையாக விருந்தாள். அப்பா எங்கோ வெளியில் சென்றிருந்தார். அவள் மெதுவாக வந்து கொய்யாமரத்தில் ஏறிக்கொண்டாள். கனிந்த பழமொன்று காணப்பட்ட கிளையை வளைத்துப் பறிக்க முயன்றபோது, வெளிப்படலை திறக்கும் சத்தம் எழுந்தது. திரும்பிப் பார்த்தாள்.

படலையைத் திறந்துகொண்டு ராகவன் வந்துகொண்டிருந்தான் அவளுக்குத் திக்கென்றது. மரத்திலிருந்து அவசரமாக இறங்கிவிட முயல, கால் தவறிவிட்டது.

அப்படியே கிளையைப் பற்றியபடி தொங்கினாள். குதித்துவிட முடியாது நான்கு அடிகளுக்கு மேல் அவள் பாதங்கள் தொங்கின.

''ஐயோ, அம்மா...'' என்று அவள் பயத்தில் அலறிவிட்டாள். ராகவன் ஓடிவந்து சிரித்தபடி அவளை ஒருகணம் பாத்தான்.

''ஐயோ அத்தான்... இறக்கி விடுங்கள்...''

அவன் அவள் கால்களை கரங்களால் கட்டிப்பிடித்தபடி, ''சரி காயத்திரி, கைகளை விடு...'' என்றான்.

''விட்டுவிட மாட்டியளே? ...''

''நிச்சயமாக கைவிடமாட்டன்... காயத்திரி...''

அவளைத் தளுவி அவன் இறக்கி விட்டான் உடல் கனன்றது. முகம் வியர்த்துச் சிவந்து விட்டது.

அவன்தான் அப்படிக் கேட்டு விட்டான் ''சும்மா விட்டிருப் பான்களா?''


எவ்வளவு கொச்சத்தனமான கேள்வி? அவளைச் சந்தேகிக்கின்ற கேள்வி?

''நச்சயமாக கைவிடமாட்டன். காயத்திரி'' என்றவன் இப்படிக் கேடடுவிட்டான். அவன் விழிகளில் தேங்கிநின்ற ஐயப்பாடு ஒருவிதமான அருவருப்புப் பார்வை ஊசிப் போன அப்பத்தில் நெளிகின்ற புழுக்களைப் பார்க்குமாப்போல... அவளுக்கு அவன் பார்வை அப்படித் தான் பட்டது.

அறைக்குள் மின்விளக்கு திடீரென எரிகிறது. அம்மாதான் போட்டிருக்கவேண்டும்.

''ஏன் காயத்திரி இருளுக்குள்ள இருக்கிறாய்? லைற்போடக் கூட நினைக்கவில்லையா?''

இவ்வளவு காலமும் அவள் வெளிச்சத்தில்தான் வாழ்ந்தாள் அவனுடைய இந்த வார்த்தைகளுடன் அவளை இருள் தன்னுள் ஆக்கிரமித்துக் கொண்டது. அவள் திரும்பி அம்மாவைப் பார்த்தாள் அம்மா துடித்



துப போகிறாள் ''ஏன்ரி அழுதாயா?''

''இல்லையே?...''

அம்மா கவலையுடன் அவளருகில் வந்தாள் அவள் தலைமயிரைப் பரிவோடு வாரிவிட்டாள்.

''ராகவன் ஏதாவது கூறினானா?''

''இல்லையம்மா...''

நாள்வைத்தாகிவிட்டது. அதைப் பற்றிப் பேசினானா?

''இல்லை... இல்லை என்னைச் சிறிதுநேரம் சும்மா இருக்கவிடம்மா தலை விண்விண்ணென இடிக்கிறது...''

இருவருக்கும் இடையில் ஏதோ சிறிது ஊடல் என அம்மா எண்ணிக் கொண்டாள். அவர்களின் காதல் ஒருநாள் இரண்டு நாட்களுக்குரியதா? பத்து வருடங்களுக்கு மேலானது என பது ஊரறிந்த விடயம்.

அம்மா அவளை அறையில் விட்டு விட்டு வெளியேறியதும் காயத்திரி கட்டிலில் சரிந்துகொண்டால் இதயம் குமுறிக் கொந்தளித்தது எப்படிப் பழகினார்கள். எவ்வளவு ஆசைக கனவுகளைக் கட்டினார்கள்?

தூரத்தில் வீதியில் ஒருவன் உரத்த குரலில் பாடிக்கொண்டு சைக்கிளில் செலவது கேட்கின்றது. அவனுடைய சைக்கிளுக்கு வெளிச்சமில்லை இருள் அவனுக்குப் பயத்தைக் கொடுக்கின்றது. அத்தானும் அப்படித்தான்.

இரவில் வெளியில் செல்வதென்றால் அவனுக்குக்கூட எவராவது வேண்டும்.

தவிர்க்கமுடியாத நிலையில் இரவில்அகப்பட்டுக் கொண்டால், தனக்குத் தெரிந்த தேவாரங்களைப் பாடிக்கொண்டு வேகமாக வீடுவந்து சேர்வான். அவளுக்கு அந்தச் சம்பவம் நன்றாக நினைவில் இருக்கிறது.

ஒருநாள் அவள் வீட்டுப் படலையை அவசரம் அவசரமாகத் திறந்துகொண்டு ''மாமா... மாமா...'' என்று சத்திமிட்டபடி ஓடிவந்தான். இரவு வேளைதான். எல்லாரும் வெளியில் முற்றத்திற்கு இறங்கி ஓடிவந்தார்கள் வியக்க விறுவிறுக்க ராகவன் முற்றத்தில் நின்றிருந்தான். அவன் உடல் மெதுவாக நடுங்கியதைக் காயத்திரி கண்டாள்.

''என்ன அத்தான்?''

''ஒன்டுமில்லை..

. ஒன்டுமில்லை... வந்தன் ஒரு கறுத்த உருவம் முகப்பில் நின்று ஆடினமாதிரி...'' அவனை வெட்கம் சூழ்ந்துகொண்டது.

''நல்ல மருமோன்...'' என அப்பா சிரித்தார்; ''வாடாப்பா... நானும்கூட வீடுவரை வாறன்...''

அப்பொழுது அவனுக்குப் பதினைந்து வயதிருக்கும்.

அப்பாவும் அவனும் சென்றதன் பின்னர் அம்மா சொன்னாள் ''அந்த முடக்கில ஆலடி வைரவர் நிற்கிறவர் என்கிறவை''

''உனக்கு விசரம்மா...'' என்று அவள் சிரித்தது இப்பொழுதும் மனதில் இருக்கிறது அப்படிப் பயந்த பிள்ளை இன்று 28 வயதில் அப்படியொரு கேள்வியை அவளிடம் கேட்டுவிட்டான். அவனுக்குள் இப்படியொரு மனிதன் ஒளிந்திருக்கின்றானா? சந்தேகம் உருவான மனிதன். இருண்டதை வைரவராகக் காணும் மனிதன்.

கட்டிலில் இருந்து எழுந்து மீண்டு யன்னலிற்கு வந்தாள் காயத்திரி.

அவளுடைய குளிர்ந்த பார்வைக்காக அவன் எவ்வளவு காரியங்கள் செய்திருக்கிறான்? ''நான் சுத்தக் கறுப்புக் காயத்திரி...''

''அதிலென்ன? கம்பீரமாக இருக்கிறியள் நிறத்தில என்ன இருக்குது''... குணத்தில வாழ்க்கை...''

''என்றாலும் காயத்திரி நல்ல சிவப்பு... காற்றூதிய தணல் மாதிரி அப்படியொரு நிறம்...''

''அத்தான், இதென்ன கதை? உங்கட நிறத்தைப் பார்த்து நான் உங்களை விரும்பவில்லை உங்கட குணத்தை நீங்க என்மேல வைச்சிருக்கிற பாசத்தை, பரிவை...''

அந்தப் பரிவு அவனுக்கு இருந்திருந்தால் அப்படி ஒருக்காலும் கேட்டிருக்க மாட்டான். அவனுக்கு என்நிறம் பிடித்திருக்கிறது என் அழகுதான் பிடித்திருக்கிறது. என் உடல்தான் பிடித்திருக்கிறது என்பது இப்பொழுது தெரிகின்றது. என் களங்கமில்லாத உள்ளம் அவருக்குப் பிடிபடவில்லை. என் இதயம் சதா அவரை நினைத்து நினைத்து உருகிக்கொண்டிருப்பது அவருக்குத் தெரிந்திருக்கவில்லை.

கனவிலும் நினைவிலும் அவர் உருவம் என் இதயம் எங்கும் வியாபித்திருப்பது அவருக்குத் தெரியவில்லை.

சுவரில் மாட்டியுள்ள ராகவனின் படம் அவள் கண்களில் படுகின்றது. வலக்கரத்தில் பட்டச்சான்றிதளைச் சுருட்டிப்பிடித்த, பட்டதாரிக்கான குளோக் உடையுடன் ராகவன் படத்தில் சிரிக்கிறான். கோட் சூட் ரையுடன் அவன் கம்பீரமாகத் தெரிகிறான்.

ஆறடி இளைஞன் முறுக்கேறிய உடல்வாகு உடலெல்லாம் பயம்.

பட்டமளிப்பு விழாவிற்கு அவள் சென்றிருந்தாள் அவளால் அவன் போலத் தொடர்ந்து படிக்க முடியவில்லை. படிப்பு அவளைக் கைவிட்டு விட்டது. ''கல்யாணமாகி வீட்டில இருககப்போகிற பொண்ணு, படிப்பு என்னத்திற்கென அம்மாவும், அப்பாவும் அக்கறை எடுக்கவில்லை. அத்தானுக்கு நிகராகத் தானும் படித்திருக்கலாம் என்ற எண்ணம் அவனிடம் பட்டமளிப்பு விழாவில் அவளுக்கு ஏற்பட்டது. கோல உடையுடன் கம்பீரமாக நடந்து மேடையில் ஏறிநிற்க துணைவேந்தர் களுத்திலிட்ட காளானுடன் இறங்கி வரும்போது அவன் பூரித்திருந்தான். அவளுந்தான்.

''அத்தான் இன்று சந்தோசமான நாள்...''

''ஏன் காயத்திரி...''

''பட்டம் கிடைத்து விட்டது இனி நீங்கள் ஒரு விஞ்ஞானப் பட்டதாரி அதுவும் கொம்பியூட்டர்ப் பட்டதாரி இனி உத்தியோகம் பிறகு'' அவள் தொடர்ந்து கூறாது தயங்கிநின்றாள். அவன் முகம் மாலை வானமாகியது.

''பிறகு...'' அவன் அவளை எப்படிக் கிண்டினான்.

''போங்க... விளங்காத ஆள்... மாதிரி...''

அவன் சற்று நேரம் மௌனமாக இருந்தான் மௌனக் கழிவில் 'இதோ பார் காயத்திரி... நான் இனி உழைக்க வேண்டும். யோகனஸ்பேக்கிற்குச் செல்ல இருக்கிறேன். அங்க ஒரு கம்பனியிலே கொம்பியூட்டர் கிராட்ஜுவேற்களுக்கு நல்ல டிமாண்ட் அழைப்புக் கிடைச்சிருக்குது நீ மறுப்பாய் எண்டு முன்னரே சொல்லவில்லை காயத்திரி ஒரு நான்கு வருடங்கள் எனக்காகக் காத்திருக்க மாட்டாயா?''

அவள் மிகழ்ச்சி கணப்பொழுதில் ஓடிவிட்டது முகம் வெளிறிச் சோர்ந்தது.

அவன் பிடிவாதக்காரன் தான் நினைத்ததைச் சாதிப்பான்.

''என்ன காயத்திரி?... எனக்காகக் காத்திருக்க மாட்டாயா?...''

''இது என்ன கேள்வி அத் தான்? காத்திருக்கிறது காத் திருக்காதது பற்றி. நீங்கள்தான் என் வாழ்வு என்றாகிவிட்ட நிலையில் இப்படிக் கதைப்பதா? உங்க ளுக்காக எவ்வளவு காலமும் நான் காத்திருப்பேன்...'' விழிகளில் நீர் மாலை கோர்த்தது.

அவன் பரிவோடு அவள் முகத்தை நாடியில் கரம் பதித்து உயர்த்தினான். விழிகளிலிருந்து கன்னங்களில் வழிந்த நீரைத் துடைத்துவிட்டான். அவள் கன்னங்களில் மெதுவாக முத்தமிட்டான்.

''என் உயிரே நீதான் காயத்திரி.''

அப்படிச் சொன்னவன் தான் இப்படிக் கேட்டுவிட்டான்.

'!'சும்மா விட்டிருப் பான்களா?'' அவனுடைய வார்த்தைகள் அவளுடலில் புழுக்களாக ஊர்ந்தன. அருவருப்போடு தன்னை உதறிக் கொண்டாள்.

வெளியே இருந்தாற் போல தூறல்கள் விழத் தொடங்கின. காலம் தப்பிய மழைத்தூறல்கள். எதிர் வீட்டின் வாசலில் ஓட்டோ ஒன்று வந்து நின்றது. யாரோ இறங்குகிறார்கள். வாசலில் ஆரவாரச் சத்தம் எழுகின்றது. யாரோ கொழும்பிலிருந்து வந்திருக்க வேண்டும். விமானம் பிந்தி வந்திருக்க வேண்டும.

கொழும்பு.. கொழும்பு...

அவன் தன்னை ஒரு கணம் உதறிக்கொள்கிறான்.

ஒரு மாலைப்பொழுதில் அவன் தனது கொழும்புக்கான பயணத்தை ஆரம்பித்தான். யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பிற்கான தரைப்பாதைகள் யாவும் மூடப்பட்டிருந்தன. வான் பாதைத் தொடர்பும் பொது மக்களுக்குக் கிடைக்கவில்லை யாழ்ப்பாணக் கடனீரேரியை வள்ளங்களில் கடந்து வன்னியூடாகப் பயணப்பட்டு வவுனியா செல்ல வேண்டும்.

அவள் விழிகள் சோகத்தின் வயப்பட்டிருந்தன. எந்த வேளையிலும் அவள் அழுது விடலாம், ராகவனை எல்லாரும சுற்றி நின்றார்கள்.

''கவனம் மோனை... கவனம்...'' என்று மாமி அடிக்கடி அவனை எச்சரித்தாள்.

மனம் விட்டு அவனோடு பேசுவதற்கு முடியவில்லை. அவனும் சற்றுக் கவலையோடு காணப்பட்டான். அவனும் ஏதோ அவளோடு பேசிவிட வேண்டுமென விரும்பினான்.

''காயத்திரி... வா...'' என்று தன் அறைக்கு அவளை அழைத்துச் சென்றான்.

அவள் அவனைப் பின் தொடர்ந்தாள். அறைக்குள் நுழைந்ததும் அப்படியே அவளை இறுகத் தழுவிக் கொண்டான். அவன் மார்பில் அவள் முகத்தைப்புதைத்துக் கொண்டு விம்மினாள். சில கணங்கள் அப்படியே கடந்தன.(தொடரும்)

# இலக்கியக் காட்சிகள்

*அபிராமி ஆனந்தன்*

## சொல்லும் செயலும்

சங்க கால இலக்கியங்கள் யாவும் தமிழில் புலமை வாய்ந்தோராலும் இலக்கிய ஆராய்ச்சி செய்பவர்களாலும் படித்துச் சுவைக்கக் கூடிய ஒன்றாகும். பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்தில் வழக்கில் இருந்த சொற்களாலான கவிதைகள் இன்று வழக்கில்லாதவையான நிலையில் எல்லோரும் படித்து இன்புற முடிவதில்லை. காலம் ஆயிரம் ஆண்டுகள் ஆனாலும், அச் செய்யுட்களில் உள்ள கவிதை நயம், அணி அழகு, உவமையழகு யாவும் தமிழ்ப் புலமையாளருடன் சிலம்பம் விளையாடக் கூடிய சொல்லழகுடன் விளங்குகின்றன. அன்றைய மனித உள்ளங்களையும் அவற்றில் ஊற்றெடுக்கும் உணர்வுகளையும் சாதாரணமானவர்களால் படித்துச் சுவைக்க முடியாதிருப்பதற்கு காரணம் அன்றைய புலவர்களிடம் இருந்த புலமை நிறைந்த தமிழ் நடைதான்.

உதாரணமாக: குறுந்தொகையில் வரும் ஒரு காட்சியை இங்கே பார்ப்போம்.

தினைப்புலம் ஒன்றில் ஓர் பெண்ணை ஓர் இளைஞன் சந்திக்கின்றான். இளம் உளளங்களிடையே காதல் அரும்பாகி மலர்கின்றது. அவளைச் சந்திப்பதற்குத் தோழிப் பெண் உதவுகின்றாள். பகலில் வந்து சந்தித்துச் சென்றவன், இரவிலும் சந்திக்க விரும்புகின்றான். சம்மதிக்கின்றாள், சந்திக்கவும் வைக்கின்றாள் தோழி. சந்திப்புத் தொடர்கின்றதே அன்றி. திருமணம் பற்றி அவன் சிந்திக்காதிருக்கவே அவனை• வரவேண்டாம் என்று தலைவி அதாவது காதலி கூறியதாக தோழி காதலனிடம் கூறி கடுத்து வருகின்றாள்.

காதலனைக் காணாத காரிகை வாடுகின்றாள். தோழியிடம் அவன் வராது போனது ஏனென்று வினவுகின்றாள். தானே அவனிடம் வரவேண்டாம் என்று கூறியதாகத் தோழி கூறுகின்றாள். தலைவி வருந்துகின்றாள். அவள் மீது பிரியம் வைத்துள்ள தோழியோ, தலைவியைப் பார்த்துக் கூறுகின்றாள்

என்மீது கோபப்படாமல் நான் சொல்வதைச் சிறிது கேள். அவன் இப்படி எல்லாம் நடந்து கொண்டதால் தான் திருமணம் பற்றிச் சிந்திக்காமலே வந்து போகின்றான். இப்படியிருந்தால் உன்னிலமை எப்படியாகும்? ஆகவேதான் நான் இப்படியோர் சூழ்ச்சி செய்தேன் நிச்சயமாக உன்னைக் காணாமல் இருக்க அவனால் முடியாது. ஆகவே திருமணம் பற்றிச் சிந்திப்பான். அந்த செய்தியுடன் வருவான். வருந்தாதே என்று கூறுகின்றாள்.

மகிழ்நன் மார்பே வெய்யையால் நீர்
அழியல் வாழி-தோழி-நன்னன்
நறுமா கொன்று ஞாட்பில் போக்கிய,
ஒன்று மொழிக் கோசர் போல,
வன்கட் சூழ்ச்சியும் வேண்டுமால் சிறிதே,
-பரணர்-



# 51, 200 பனம் விதைகள் மீள் நடுகை செய்யப்பட்டது

எமது தமிழ் தேசத்தின் பிரதான மூலவளங்களில் ஒன்றான பனை வளம் கடநதகால ராணுவ நடவடிக்கைகள் காரணமாக வடக்கு - கிழக் கில் மட்டும் 21 லட்சம் பனை மரங்கள அழிக்கப்பட்டுள்ளன. இது எமது பொருளாதாரத்திற்கு ஏற்பட்ட பாரிய பின்னடைவும் தாக்கமும் என்பதை எவராலும் மறுக்கமுடியாத ஒன்றாகும். எனினும் இந்நிலையை எதிர் கொள்ள நாம் பனம் விதைகளின் மீள் நடுகையில் அவசரம் ஈடுபடவேண்டிய தேவை உள்ளது இதை உணர்ந்த வடமாகாண தெ.ப.பொ.கூ.ச சமாசத்தின் அங்கத்துவ சங்கங்கள் இவ்வாண்டு துரிதபனம் விதை நடுகையில் ஈடுபட்டுள்ளன.

2003 ஆம் ஆண்டில் இற்றை வரை சங்கங்களால் நடப்பட்ட பனம விதைகளின் விபரம் வருமாறு:-

யாழ்ப்பாணம் 400, கோண்டாவில் 3500, அரியாலை 300, மானிப்பாய் 1600, சங்கானை 5000, பண்டத்தரிப்பு 3800, சுன்னாகம் 4000, தெல்லிப்பழை 5000, அச்சுவேலி 5600, சாவகச்சேரி 1500, கரவெட்டி 5000, கொடிகாமம் 5000, ஊர்காவற்றுறை 5500, வேலணை 5000 ஆகும்.

## அச்சுவேலி பனை - தென்னை வள

# அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் கூட்டுறவுக் கிராமிய வங்கித் திறப்புவிழா

அச்சுவேலி பனை - தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத் தின, கூட்டுறவுக் கிராமிய வங்கியின் திறப்புவிழா 7.5.2003 புதன்கிழமை சங்கத் தலைவர் திரு செ.கந்தராசா தலைமையில் நடைபெற்றது.

இவ்விழாவிற்கு பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கூட்டுறவு அபி விருத்தி உதவி ஆணையாளர் திரு சு.கணேசமூர்த்தி (பனை - தென்னைவள அபிவிருத்தி) கிராமிய வங்கியைத் திறந்து வைக்க, கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு.பொ.சிவலிங்கம் (கணக்காய்வு) வங்கியின் பெயர்ப்பலகையை திரை நீக்கம் செய்துவைத்தார்.

பனை - தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள், கொத்தணித் தலைவர்கள், பொது முகாமையாளர்கள், அங்கத்தவர்கள், பொதுமக்கள், பணியாளர்கள், மகளிர் குழு உறுப்பினர்கள் எனப் பலரும கலந்து கொண்ட இந்நிகழ்வில் சிறப்பு விருநதினர்களாகக் கலந்து கொண்ட தமிழீழ நிர்வாகசேவை கூட்டுறவுத் துறையைச் சேர்ந்த திரு.இ.இலங்கன், வலி. கிழக்குப் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு.யாழவன், அச்சுவேலி மக்கள்வங்கி முகாமையாளர் திரு.க.சண்முகலிங்கம், கூட்டுறவுப் பரிசோதகர் திரு.இ.விஜய மோகனராசா, வடமராட்சி கொத்தணித் தலைவர் திரு.க.குணராசா, யாழ். மாவட்ட கூட்டுறவு சபைச் செயலாளர் திரு.சு.சிவசுப்பிரமணியம் ஆகியோர் சிறப்புரை நிகழ்த்தினர்.

இவ் விழாவில் ஊழியர் தொழிற் சங்கத்தினர் வங்கியின் திறப்பு வழாவினை வாழ்த்திய வாழ்த்துமடல் ஒன்றும் வழங்கப் பட்டது.

சங்கத்தின் கணக்காளர் ம.தவராசா வரவேற்புரையை நிகழ்த தினார். உறபத்தி முகாமையாளர் திரு.இ.வரதராசன் நன்றிகூறினார். சங்கத்தின் அங்கத்தவர்கள், பொதுமக்கள் எனப்பலரும் ஆர்வத்துடன், கலந்துகொண்டதுடன், வங்கியில் புதுக்கணக்கையும் ஆரம்பித்தனர்.



பனம்விதை மீள் நடுகைத் திட்டத்தின் கீழ் சங்கானை பனை - தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தலைவர் திரு. இராசரத்தினம் பனம்விதை நடுவதை படத்தில் காணலாம். படத்தில் விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு.யாழவன், சங்கப்பொது முகாமையாளர், சமாசக் கல்வி உத்தியோகத்தர் ஆகியோர் காணப்படுகின்றனர்.

# அதிக விளைச்சலைப் பெற உமியை எவ்வாறு கரியாக்குவது?

பெரும்பாலான விவசாயிகள் உமியைக் கரியாக்குவதில் போதிய விளக்கமின்மையால் அவற்றைப் பயிர்களுக்கு இட முயற்சிப்பதில்லை. எனவே விவசாயத்திணைக்களம் மிக எளிமையானதொரு உபகரணத்தை வடிவமைத்துள்ளது.


### எவ்வாறு இதனை தயாரிப்பது?

வெற்று எஞ்சின் ஒயில் பீப்பாவின அடிப்பகுதியில் ஒவ்வொன்றும் சமமான துாரத்தில் அமையத்தககவாறு 20x20ச.மீ அளவுள்ள மூன்று துவாரங்களை வெட்டவும் பீப்பாயின் மேற்பகுதியிலி ருந்து $^{3}/_{4}$ பங்கு உயரத்திற்கு 10ச.மீ இடைவெளியில் சிறு துளைகளை ஆணி ஒன்றால் இடவும் இவை காற்றோட்டத் திற்கு உதவும பீப்பாயின் மேற் பகுதியின் மத்தியில் 20ச.மீ விட்டமுள்ள துவார மொன்றை இடவும்.

இதில் 105ச.மீ உயரமான புகைபோக்கியை அமைக்கவும். புகைபோக்கி கழன்று போகாதவாறு மூன்று ஆதாரங்களினால் பீப்பாயுடன் இணைத்து பொருத்தி விடவும் புகைபோக்கியைத் தயாரிக்க 18கேஜ் தடிப்புடைய இருப்புத் தகடு மிக உகந்ததாகும். இந்த எளிமையான உபகரணத்தின் மூலம் ஒரே தடவையில் 750கி.கி உமியை கரியாக்கலாம். இதன் மூலம் 325 - 350 கி.கி கரியை பெறலாம் இதற்கு 6மணித்தியாலங்கள் போதுமானதாகும். இந்த உபகரணத்தை தயாரிப்பதற்கு ரூபா1200 - 1400வரை மாத்திரமே செலவேற்படும்.

### உமியை எவ்வாறு கரியாககுவது?

அடிப்பகுதியிலுள்ள துவாரத்தினூடாக உமி நிரப்பிய $^{2}/_{3}$ சிரட்டைகளை பீப்பாயின் உள்ளே வைத்து தீ மூட்டவும் தீ மூட்ட சிறிதளவு மண்ணெண்ணெயைப் பயன்படுத்தினால் தீ மூட்டுவது இலகுவாக இருக்கும் சிரட்டைகளில் நன்கு தீப்பற்றிய பின்னர் பீப்பாய் முழுமையாக சூடேற இடமளிக்கவும். இதற்கு 20நிமிடங்கள் வரை தேவைப்படும். பீப்பாய்சரியான அளவில் சூடேறி




உள்ளதா என்பதை அறிய உலர்ந்த உமியில் சிறிதளவை பீப்பாயின் மேற்பகுதியில் இடவும். இது உடனடியாக நிறம் மாறுமாயின் சரியான அளவில் பீப்பாய் சூடேறியுள்ளது.

சூடேறிய பீப்பாயைச் சுற்றி உமியைக் குமித்து விடவும் புகை போக்கியில் 1.3 பங்கு உயரம் வரை உமியைத் தீட்டல் வேண்டும். புகை போக்கிக்கு அண்மையில் உள்ள உமி கறுப்பு நிறமாக மாறும்போது அதனை கிளறி விட்டு கறுப்பு நிறமற்ற பீப்பாயின் அடிப்புற உமியை மேலே குவித்து விடவும். இவ்வாறு எல்லா உமியும் கரியாகும்வரை கிளறவும். எல்லா உமியும் கறுப்பு நிறமாகியதும் பீப்பாய் மீது நீரூற்றி அதன் வெப்பத்தை குறைக்கவும். வெப்பம் குறைந்த பின்னர் பீப்பாயை வெளியே எடுக்கவும். இச்சமயத்தில தொடர்ந்தும் உமி எரியுமாயின் நீரூற்றி அணைத்து விடவும் உமியைப் பரவி உலரவிடவும். உலர்ந்த உமியை பைகளில அடைத்து சேமித்து வைக்கலாம். அல்லது தோட்டத்திற்கு நேரடியாக இடலாம். ஆனால் ஒன்றை மறந்து விடாதீர்கள் எக்காரணத்தாலும் உமியை சாம்பராக்க வேண்டாம். சாம்பராக்கினால் எவ்விதமான பிரயோசனமும் இல்லை பொதுவாக ஒருவர் இவ்வாறான 6உபகரணங்களை ஒரே தடவையில் பயன்படுத்தி உமியை கரியாக்கலாம். இம் முழுச் செயற்பாட்டிற்கும் 6 - 7 மணித்தியாலங்கள் போதுமானதாகும்.

# பெண்கள் தமது ஆளுமையின் மூலம் உரிமைகளை நிலைநாட்ட வேண்டும்!

## கோகிலா மகேந்திரன்

தெல்லிப்பழை பலநோக்கு கூட்டுறவுச் சங்க மகளிர் குழுவின ஆண்டு விழா,சங்கத்தலைமை காரியா லயத்தில் சங்க மகளிர் குழுத்தலைவி திருமதி பத்மாதேவி பாலகணேசன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இவ் விழாவில் செல்விகள் ந.மரியராணி, ந.ஜெயராணி கூட்டுறவுக்கீதத்தை வழங்கினார் கள் வரவேற்புரையை செல்வி இ.நந்தினி நிகழ்த்தினார்.

திருமதி கோகிலாமகேந்திரன் அவர்கள் உரையாற்றும் போது பெண்கள் தம்மீது சுமத்தப்படும் பல்வேறு அழுத்தங்களின் போதெல்லாம் தமது திறமைகளையும் ஆளுமைகளையும் வெளிப்படுத்த வேண்டும். பெண் உரிமைகளை நிலைநாட்ட வேண்டும். இதற்கு மகளிர் அனைவரும் மகளிர் அமைப்புக்கள் ஊடாக ஒன்றுபட்டு உழைக்க வேண்டு மென்றுகேட்டுக் கொண்டார்.

கூட்டுறவுத்துறைப் பொறுப்பாளர் திரு.புஷ்பகுமார் உரைநிகழ்த்தும் போது கூட்டுறவுத்துறை தற்பொழுது பாரிய பின்னடைவைச் சந்தித்துள்ளது. அங்கத்தவர்கள் ஒன்றிணைந்து தமது பங்களிப்புக்களை வழங்கி கூட்டுறவுத்துறையை வளர்ப்பதற்கு முன்வரவேண்டும் விப்பதற்கு தான் உறுதுணையாக இருப்பேன் என்று குறிப்பிட்டார்.

மக்கள் வங்கி பிராந்திய அலுவலக திரு.பொன். கணேசமூர்த்தி உரை நிகழ்த்தும் போது




தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின மகளிர்குழுவின் ஆண்டுவிழா மகளிர் குழுத்தலைவி திருமதி பா.பாலகணேசன் தலைமையில் நடைபெற்ற போது வலயம் இரண்டின் உதவிக் கல்விப்பணிப்பாளரும் உளவியலாளருமான திருமதி கோகிலா மகேந்திரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்துவதை படத்தில் காணலாம். படத்தில் சங்கத்தலைவர் திரு.எஸ். சிவமகாராசா, மக்கள் வங்கி பிராந்திய அலுவலர் திரு.பொ.கணேசமூர்த்தி, நிர்வாக சேவை கூட்டுறவுத்துறைப் பொறுப்பாளர் திரு.புஸ்பகுமார் ஆகியோரும் காணப்படுகின்றனர்.

பெண்களின் பங்களிப்பும் அதிகரிக்கப்படல் வேண்டும் எனவும் கூறினார்.

சங்கத்தலைவர் திரு. சி. சிவமகாராசா உரையாற்றும் போது கடந்த காலங்களில் மகளிர் செயற்பாடுகள் நல்லமுறையில் நடைபெற்று வந்தது கடந்த சில ஆண்டுகளில் ஏற்பட்ட போர் அனர்த தங்களால் நடவடிக்கைகள் முற்றாக இடைநிறுத்தப்பட் டது.

தற்போது மீண்டும் மகளிர் குழுச் செயற்பாடுகளை ஊக்கு சங்கத்தலைவர் சிவமகாராசா அன்றும் இருந்தார். மகளிர் குழுச் செயற்பட வழிவகுத்து கொடுத்தார். இன்றும் இருக்கிறார் எதிர்காலத்திலும் ஆதரவு வழங்குவார் என்று கூறினார்.

யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபை மகளிர் விவகார உத்தியோகத்தர் திருமதி வே.செல்வரத்தினமும் உரை நிகழ்த்தினார் கலைநிகழ்ச்சிகள் இடம் பெற்றன செல்வி சி.கௌரி தேவி நன்றியுரை கூறினார்.



அச்சுவேலி பனை - தென்னைவளஅபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் கிராமிய வங்கியினை கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. எஸ்.கணேசமூர்த்தி (பனை-தென்னை வளம்) நாடாவை வெட்டித்திறந்து வைப்பதை முதலாவது படத்திலும் யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபை செயலாளர் திரு. எஸ்.சிவசுப்பிரமணியம் உரையாற்றுவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

## உலர் உணவு நிவாரணத்துக்கான

# நெல்லை கொள்வனவு செய்து அனுப்ப

# மன்னார் அரச அதிபர் ஏற்பாடு

யாழ். குடநாட்டில் உள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களினால் மேற்கொள்ளப்பட்டு வரும் இலவச நிவாரணத்திற்கான உலர் உணவு பொருள் விநியோகத்துக்கான நெல்லை மன்னார் மாவட்டத்திலிருந்து கொள்வனவு செய்து அனுப்புவதற்கான ஏற்பாடுகளை மன்னார் அரச அதிபர் எஸ்.விஸ்வலிங்கம் மேற்கொண்டுள்ளார்.

உலர் உணவுப் பொருள் விநியோகத்துக்கான நெல்லை மன்னாருக்கு வந்து கொள்வனவு செய்து கொண்டு போகுமாறு யாழ் மாவட்ட பல நோக்குக் கூட்டுறவு சங்கங்களை அவர் கேட்டுக் கொண்டுள்ளதுடன் மன்னாரில் போதியளவு நெல் களஞ்சியப் படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இடம் பெயர்ந்த குடாநாட்டு மக்களின் நிவாரணப்பொருள் விநியோகத்துக்கு உளளூரில் இருந்து தேவையான அரிசியை பல நோக்குக் கூட்டுறவு சங்கங்கள் நேரடியாக கொள்வனவு செய்ய யாழ் அரச அதிபர் அனுமதி வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



இரண்டாவது உலக இந்துமாநாட்டை முன்னிட்டு கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூ.சங்கம் ஏற்பாடுசெய்திருந்த ஊர்தி பவனிவருமுன் சங்க பணியாளர்கள் சகிதம் எடுக்கப்பட்ட படம்.

**ஊர்காவற்றுறை...**

மங்கல விளக்கேற்றி வைக்க நந்திக் கொடியினை சைவப் புலவர் சித்தாந்த பண்டிதர் இ. நித்தியானந்தம் ஏற்றி வைத்தார். அதனைத் தொடர்ந்து போட்டிகள் தம்பாட்டி ஸ்ரீமுத்துமாரி அம்பாள் ஆலய அன்னதான மண்டபத்தில் நடைபெற்றது. இப்போட்டிகளில் ஆண், பெண், சிறுவர் வளர்ந்தோர் என வேறுபாடின்றி அனைவரும் ஆர்வத்துடன் பங்கேற்றனர். இறைபக்தியை ஊட்டும் பக்திப்பாடல்களும் பண்ணிசைப் பாடல்களும் அன்னை முத்துமாரி அம்பாள் ஆலய அன்னதான மண்டபத்தில் ஒலித்துக் கொண்டிருந்தன.

சங்கத் தலைவர் தி. சுந்தரலிங்கம் தலைமையில் பரிசளிப்புவிழா ஆரம்பமானது. இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ். செல்வநாயகம் தம்பாட்டி கிராம சேவையாளர் ம. சகாதேவன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

இவ்விழாவை முன்னிட்டு நடாத்தப்பட்ட போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டியவர்களுக்கு ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ். செல்வநாயகம் தம்பாட்டி கிராம சேவையாளர் ம. சகாதேவன் ஊர்காவற்றுறை பலநோக்கு கூட்டுறவு சங்க பொது முகாமையாளர் ந. ஜெயராசா. கிளைத் தலைவர் சி. லட்சுமணண் முத்துமாரி அம்பாள் ஆலய பரிபாலனசபை தலைவர் இராமச் சந்திரன் வேலணை மத்திய மகாவித்தியாலய ஆசிரியர் த. கபிலநாதன் எஸ். சபாரத்தினம் ஆகியோர் வழங்கிக் கௌரவித்தனர்.

யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை மகளிர் விவகார உத்தி யோகத்தர திருமதி வே.செல்வரத்தினம் கூட்டுறவுசபைகணன விரிவுரையாளர் எஸ். சிவகௌரி மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

இவ்விழாவினை ஒட்டி சமய குரவர்கள் நால்வர் அடங்கிய உருவப் படங்களும் சங்கத்தால் அச்சிடப்பட்டு வழங்கப்பட்டன.

**(கட்டைவேலி...)**

திரு.மு.நவரத்தினம், திரு.மு. வேதாரணியம் ஆகியோரது பண்ணிசை நிகழ்வும் இடம் பெற்றது.

தமிழகத்திலிருந்து வருகை தந்த டாக்டர். கண்ணப்பனார், பேராசிரியர் கலாநிதி செல்வி மலர் பேராசிரியர் திரு. செல்வ கணபதி ஆகியோரின் சிறப்புச் சொற்பொழிவுகள் இடம்பெற்றன.

தொடர்ந்துசங்கீத ஆசிரியர் திருமதி ஜெயகௌரி செல்வ மோகன் ஆசிரியை செல்வி. ஜெயபாரதி ஆகியோரது இசைக் கச்சேரி வயலின் வித்துவான் ஏ.ஜெயராமன் மிருதங்க வித்துவான் திரு கே.செல்வமோகன் ஆகியோரது பக்க வாத்தியங்களுடன் இடம் பெற்றது. விழாவின் இறுதி நிகழ்வாக ஆசிரியர் சி. பாலமுரளி அவர்களை நடுவராகக் கொண்டு பல்கலைக்கழக மாணவர்களினால் சைவப்பண்பாட்டைப் பெற்றுப் பேணிக்காப்பது ஆண்களா? பெண்களா? என்ற தலைப்பில் சிறப்பான பட்டி மனறம் இடம் பெற்றன.

**(17 பலநோக்கு....)**

100ரூபா பங்குபபணம் செலுத்தி சுயமுயற்சியில் ஈடுபடுகின்ற அங்கத்தவர்கள் ஒருவித கட்டணமும் இன்றி இக்கடனைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இக்கடன்திட்டத்தின் கீழ் 17பல. நோ.கூட்டுறவுச சங்கங்களாக சேர்ந்த சுமார் 3194 (இன்று வரை) அங்கத்துவபயனாளிகள் பயன் பெற்றுள்ளனர்.

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு யு.என்.டி.பி நிறுவனத்தினால் வழங்கப்பட்ட நிதி விபரம் வருமாறு.

அளவெட்டி மல்லாகம் ப.நோ.கூ.சங்கம் 1, 150,000 ரூபா, சாவகச்சேரி ப.நோ.கூ.சங்கம் 1,700,000 ரூபா,சுன்னாகம் ப.நோ.கூ.சங்கம் 1,200,000ரூபா, பண்டத்தரிப்பு ப.நோ.கூ.சங்கம் 1,700,000 ரூபா, தெல்லிப்பழை ப.நோ.கூ. சங்கம் 1,450,000 ரூபா, நெடுந்தீவு ப.நோ.கூ.சங்கம் 1,000,000 ரூபா,காரை நகர் ப.நோ.கூ.சங்கம் 1,000,000 ரூபா, புங்குடு தீவு நயினா தீவு ப.நோ. கூ.சங்கம் 1,000,000 ரூபா, ஊர்காவற்றுறை ப.நோ.கூ. சங்கம் 1,000,000 ரூபா,வேலணை ப.நோ.கூ.சங்கம் 1,000,000 ரூபா நீர்வேலி ப.நோ.கூ.சங்கம் 500,000 ரூபா, உடுப்பிட்டி ப.நோ. கூ.சங்கம் 500,000ரூபா, நல்லூர் ப.நோ.கூ. சங்கம் 500,000ரூபா, கைதடி ப.நோ.கூ.சங்கம் 500,000ரூபா, சங்கானை ப.நோ.கூ.சங்கம் 500,000ரூபா,மானிப்பாய் ப.நோ.கூ.சங்கம் 500,000ரூபா, கட்டை வேலி, நெல்லியடி ப.நோ. கூ.சங்கம் 500,000 ரூபா

புதுப் பொலிவுடன்
கணனிமயப்படுத்தப்பட்டு வெளிவரும்
ஐக்கியதீபம் கூட்டுறவாளர்களின்
உள்ளங்களில் சுடர்விட்டுப்
பிரகாசிக்க வாழ்த்தும்
வலிகாமம் பனை தென்னைவள
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின்
கொத்தணி-மானிப்பாய்

## மழலைகள் சங்கமம்

என்னும் பகுதி ஐக்கியதீப இதழில் ஆரம்பக்கப்பட இருப்பதனால் உங்கள் மழலைச் செல்வங்களின் புகைப்படங்களுடன் பெயர், வயது, கல்வித்தரம் போன்ற விபரங்களுடன்

**மழலைகள் சங்கமம்**

பெயர்: ..............................

வயது: ..............................

முகவரி: ..............................

.............................. ..............................

பொது முகாமையாளர் கையொப்பம்

ஆசிரியர்
''ஐக்கிய தீபம்'
'யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபை
கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபம் 2ம் மாடி
இல:12,கே.கே.எஸ்வீதி,
யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு 'அனுப்பி வைக்கவும்.

**(கூட்டுறவு நிறுவனங்........)**

தாகவும் வகுக்கப்பட வேண்டும்.

இத்தகைய - கருத்திட்டங்களை தயாரிப்பவர்கள் விருப்பு, வழி காட்டுதல், ஒழுக்கம், அர்ப்பணிப்புடன் செயற்படக் கூடியவர்களாக இருக்க வேண்டும் என்று கூறிய கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் யாழ். மாவட்டத்தில் கூட்டுறவுஅமைப்புகளில் ஊடுருவியுள்ள அரசியல் தலையீடுகளையும், ஊழல்களையும் களைந்து கூட்டுறவு இயக்கத்தை முன்பிருந்த நிலைக்கு கொண்டு வருவதற்கு அனைவரும் அர்ப்பணிப்புடன் செயலாற்ற முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

யு.என்.டீ.பி திட்ட இணைப்பாளர் திரு. ஜோய் கூப்பர் மாநாட்டை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில கூட்டுறவுத் திணைக்களத்தின் பலம், பலவீனம், வாய்ப்புக்கள், அச்சுறுத்தல்கள் என நான்கு கூறுகளாகப் பிரித்து இக் கலந்துரையாடல் மூலம் ஆய்வுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார்.

இம்மாநாட்டில் யு.என்.டீ.பி யாழ். மாவட்ட திட்ட இணைப்பாளர் திருமதி ஞான சிவபாதசுந்தரம், வவுனியா மாவட்ட திட்ட இணைப்பாளர், திரு.எஸ் கனக சபை திருகோணமலை மாவட்ட திட்ட இணைப்பாளர், வி.ரி. யோகராஜா ஆகியோருடன் அம்பாறைக கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் ஆர். எ.டி. கருணாரட்ண, கல்முனை கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி. அரசரட்ணம், மட்டக்களப்பு கூட்டுறவுஅபிவிருத்தி உதவி ஆணையாளர். வி. பேரின்பம், வவுனியா கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கே. பலசுப்பிரமணியம், மன்னார் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திருமதி ஜே.செல்வரத்தினம், திருகோணமலை கூட்டுறவு அபிவிருததி உதவி ஆணையாளர் என். முருகேசன், கிளிநொச்சி கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் ரி. கந்தசாமி, முல்லைத்தீவு கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ். சிவமய[illegible] யாழ்ப்பாணம் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் செ.கனகசபாபதி (அபிவிருத்தி) பொ.சிவலிங்கம் (கணக்காய்வு), சு.கணேசமூர்த்தி (ப.தெ.வ. அபிவிருத்தி) மற்றும் வடக்கு கிழக்கு மாகாண கூட்டுறவுத் திணைக்களத்தைச் சேர்ந்த கூ.உ ஆணையாளர்கள்எஸ்.கே.சண்முகநாதன், எஸ்.காந்தராசா ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

**யுத்த அனர்த்தத்தினால்...** தலைவர் க. கனகலிங்கம் அவர்களினால் சமர்ப்பிக்கப் பட்டது.

அம் மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

யாழ்ப்பாண மாவட்டத்தில் சுமார் 5000றகும் மேற்பட்ட ப.நோ.கூ சங்க ஊழியர்கள் கடமை புரிகிறார்கள். இவர்களுக்கு பெரும்பாலும் சம்பள அதிகரிப்போ அல்லது மேலதிக கொடுப்பனவுகளோ இல்லை. அதே வேளை சொத்துடமைகளுக்கு ஏற்பட்ட எவ்வித நட்ட ஈடும் வழங்கப்பட வில்லை. அரச உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டு வந்த அபாயபடிகளும் இல்லை. குறைந்த சம்பளத்திற்கு பணி புரியும் இவர்களது நிலை கவலைகிடமாகவுள்ளது. ஆதலால் சம்பள உயர்ச்சி அபாயப் படி நட்ட ஈடு என்பன இப்பணியாளர்களுக்கு கிடைக்கச் செய்ய வேண்டும்.

தமது சொந்த எல்லைப் பரப்பிற்கு சென்று தலைமை அலுவலகங்களை, கிளைகளை திறந்து செயற்பட முடியாதவாறு உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனால் சில ப.நோ.கூ. சங்கங்களை சிறப்பாக செயற்பட அனுமதிக்கவேண்டும்.

திறந்த பொருளாதார கொள்கைகள் காரணமாக தனியார் துறையுடன் போட்டிபோட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. ஆனால் தொழிற்படு மூலதனம் இன்றி ப.நோ.கூ. சங்கங்கள் இருப்பதால் இலகு கடன்களை வங்கிகள் மூலம் ஏற்படுத்தித[illegible] வேண்டும்.

வடபகுதி விவசாய உற்பத்திப் பொருட்களுக்கான சந்தை வாய்ப்பை தென்பகுதிகளில் ஏற்படுத்தித் தர வேண்டும்.

ப.நோ.கூ. சங்கங்கள் புதிய கைத் தொழில் முயற்சிகளை மேற்கொள்ள நிதி ஆதாரங்களை பெற்றுத்தரவேண்டும்.

ப.நோ.கூ. சங்கங்கள் தமக்காக நிவாரணப் பொருட்களை யாழ். மா.வி.நு.கூ.ச சமாசத்தின் ஊடாக கொள்வனவு செய்து விநியோகிக்கும் உரிமைகளை தரவேண்டும்.

அரசு - விடுதலைப்புலிகள் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் தெரிவிக்கப்பட்டவை அனைத்தும் இதுவரை நிறைவேற்றப்பட வில்லை. இவை நிறைவேற்றப் படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

கூட்டுறவின் ஒளிவிளக்காய்
கூட்டுறவாளர் நெஞ்சங்களில்
சுடர்விட்டுப் பிரகாசிக்கும்
ஐக்கிய தீபம்
திங்கள் இதழ் சிறப்புற
வெளிவருவதை
பாராட்டுகிறோம்
கட்டைவேலி நெல்லியடி
ப.நோ.கூ.சங்கம் கரவெட்டி

## எதிர்பாருங்கள்

ஜூன்மாத ''ஐக்கியதீப'' இதழில்
ஈழத்தின் புகழ்பூத்த ஜனரஞ்சக நாவலாசிரியர்
கே.எஸ்.ஆனந்தன் எழுதும்

?

தொடர் நாவல்

- ஈழத்தின் பிரபல எழுத்தாளர் திருமதி கோகிலா மகேந்திரன் எழுதும் (வலிகமம் உதவிக்கல்விப் பணிப்பாளர்) ''பாவையர் உளநலம்'' என்பன வெளிவரவுள்ளது.
- சங்கமுகாமையுடன் தொடர்பு கொண்டு உங்களுக்குத் தேவையான பிரதிகளுக்கு முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளுங்கள்.